**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

D.W.–1

O.S.No.211/2023

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. பழனிசாமி | வயது: 75 |
| த/பெ. : திரு. ராமசாமி | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதிகள் ஆஜர் இல்லை. பிரதிவாதி ஆஜர். வாதிகள் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் அ.வ.எண். 211/2023 ல் பிரதிவாதி அ.வ.எண். 323/2010 ல் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 14.4.1980 – பிரதிவாதி பழனிசாமி பெயரில் உள்ள கிரைய ஆவணம் (அசல் ஆவணம் சாட்சியிடம் உள்ளதாக கூறுகிறார்) | சான்றிட்ட நகல் | **பி.வா.சா.ஆ 1** |
| 16.10.1984 – பிரதிவாதி பழனிசாமி பெயரில் உள்ள கிரைய பத்திரம்(அசல் ஆவணம் சாட்சியிடம் உள்ளதாக கூறுகிறார்) | சான்றிட்ட நகல் | **பி.வா.சா.ஆ 2** |
| 6.8.2010 – திருப்பூர் மாவட்டம், தொங்குட்டிபாளையம், சர்வே எண். 378/1 ஏ, 1 பி, 2 ஏ, 378/2 ஏ, 318/3 சொத்திற்குரிய பட்டா எண். | அசல் | **பி.வா.சா.ஆ 3** |

| | | |
|---|---|---|
| 1286 | | |
| 4.8.2010 – திருப்பூர் மாவட்டம், தொங்குட்டிபாளையம், சர்வே எண். 378 சொத்திற்குரிய புலவரைபடம் | உண்மை நகல் | **பி.வா.சா.ஆ 4** |
| 4.8.2010 – தொங்குட்டிபாளையம் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்று | அசல் | **பி.வா.சா.ஆ 5** |
| 4.8.2010 – பசலி 1419 க்குரிய கந்தாய ரசீது | அசல் | **பி.வா.சா.ஆ 6** |
| 4.8.2010 – பசலி 1419 க்கு திருப்பூர் தொங்குட்டிபாளையம் சர்வே எண். 378/1 ஏ 1 பி சொத்திற்குரிய அடங்கல் | உண்மை நகல் | **பி.வா.சா.ஆ 7** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய அவகாசம் கோரியதால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.11.13 18:47:49 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.